1974 சனவரி 19]

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, அடையாறு உப்பங்கழிப் பகுதியை, உடனடியாக அழகுபடுத்த, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்கு தனியாக ஒன்றும் இல்லை. ஆனால், அடையாற்றின் கரைகளை அழகு படுத்தும் செயற்குறிப்பை மேற்கொள்ள ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

New Fertilizer Factories

* 13 *Q.* THIRU N. DENNIS:

THIRU N. K. PALANISWAMY: Will the Hon. **the** Minister for Industries be pleased to state:

(*a*) whether any new Fertilizer Factories are to be started in (i) public, (ii) private and (iii) Joint Sector in this State;

(*b*) if so, whether any report has been prepared in this connection; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலையை நிறுவிக்கொண்டிருக்கும் கூட்டுத் துறை நிறுவனமான சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட், ரூ. 140 கோடி செலவில் இரண்டாவது உரத் தொழிற்சாலையைக் கடலூரில் அமைக்க இசைவுக் கடிதம் கோரி மத்திய அரசுக்கு ஜூலை 1973-ல் மனு செய்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: அவைகளிலிருந்து கிடைக்கும் மொத்த உர உற்பத்தியின் அளவு எவ்வளவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதுள்ள தொழிற்சாலைகளினுடைய கப்பாசிட்டி, அம்மோனியா 1,100 டன், யூரியா 1,600 டன், டிஎபி/என்பிகே 600 டன், சல்ஃபரிக் ஆசிட் 470 டன், பாஸ்ஃபரிக் ஆசிட் 165 டன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன? அவைகளில் எத்தனைக்கு லெட்டர் ஆப் இன்டென்ட் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது?

நம்முடைய தேவை அதிகமாக இருப்பதால் ஏன் அதிகப்படியான உரத் தொழிற்சாலைகளை நாம் கேட்கக் கூடாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் கேள்வி புரியவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திற்கு எத்தனை மனுக்கள் வந்தன என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றி நம்மிடத்திலே தகவல் இல்லை. நம்முடைய மாநிலத்திலிருந்து இந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒன்று, மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் ஒரு எக்ஸ்டென்ஷன் போட வேண்டுமென்ற ஒன்று, இரண்டுதான் மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உரத் தொழிற்சாலை எப்பொழுது தன் புரடக்ஷனை ஆரம்பிக்கும்? அப்படி உரம் தயாரித்தால், அது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில்தான் இருக்குமா? அல்லது மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது தனிச் சலுகை வழங்கப்பட இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல கேள்வி. உரத்தையெல்லாம் நாம் தயார் செய்கிறோம். ஆனால் உரத்தை விநியோகம் செய்கிற அதிகாரம், விலை நிர்ணயிக்கிற அதிகாரம், யாருக்கு அது கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கின்ற அதிகாரம் அங்கேதான் இருக்கிறது. ஸ்பிக் நிறுவனம் திட்டமிட்ட ஒரு தொழிற்சாலையையும், மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் எக்ஸ்டென்ஷன் அமைக்கவும் அனுமதி கேட்டிருக்கிறோம். இரண்டும் கிடைக்குமானால், தமிழ்நாட்டினுடைய தேவையை விட அதிகமாக உற்பத்தி செய்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது.

திரு. அ. இராசமாணிக்கம் : இதுபோன்ற உரத்தொழிற்சாலை ஒன்று துறைமுகப் பகுதியான நாகையில்—அது பின்தங்கிய பகுதியாக இருப்பதால்—அங்கே துவக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாகப்பட்டிணத்தில் துவக்குவதுபற்றித்தான் முதலில் பரிசீலனை செய்யப்பட்டது. அதைவிடக் கடலூர் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள்.